
# சிந்தையின் போர்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# சாத்தான் குரூரமான வழியிலே தொலைக்காட்சி மற்றும் காரியங்களை வீட்டிற்குள் கொண்டு வந்து மக்களின் சிந்தையை பாழாக்கிவிட்டான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 35 - நாங்கள் இயேசுவைக் காண வேண்டும், விக்டோரியா BC, 62-0727

இந்நாட்களில் உலகத்தின் காரியங்கள் தற்கால சபைகளை மிக அதிக அளவில் பிடித்திருப்பது மிகவும் மோசமானது.

**சாத்தான் குரூரமான வழியிலே தொலைக்காட்சி மற்றும் காரியங்களை வீட்டிற்குள் கொண்டு வந்து மக்களின் சிந்தையை பாழாக்கிவிட்டான்.**


இந்நாள் வரை, கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் சபைகளைச் சார்ந்த அதிக சதவீதமானவர்கள், புதன் கிழமை இரவுகளில் ஜெபத்திற்கு செல்லா

மல் வீடுகளிலேயே தங்கியிருந்து, அல்லது எங்கோ திரையிடப்படும் தங்களுக்குப் பிரியமான ஹாலிவுட் நடிகர்களின் நிகழ்ச்சிகளை காண்கின்றனர்.

அத்திரைப்படங்கள் திரையிடப்படக் கூடாத அளவிற்கு மோசமாயுள்ளது.

மூன்று அல்லது நான்கு கணவர் களுடன் அல்லது மனைவிகளுடன் எல்லா வகையான, எல்லாவிதமான வாழ்க்கையும் வாழ்ந்து கொண்டு வெளியே சென்று மதுபான விருந்துகளுக்கும், புகைப்பிடிப்ப தற்கும், சயனிப்பதற்கும் என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் செய்து கொண்டு... இது தவறானது

தாங்கள் செய்வது இன்னதென்று உணராத அளவிற்கு பெண்கள் சென்று கொண்டிருக்கின்றார்கள். ஒரு அசுத்த ஆவி அவர்கள் மீது உள்ளது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 163, தேவனால் அருளப்பட்ட ஒரே ஒரு வழி, சிக்காகோ, இல்லினாய் 63-0731

தாங்கள் செய்வது இன்னதென்று உணராத அளவிற்கு பெண்கள் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு அசுத்த ஆவி அவர்கள் மீது உள்ளது.

ஒரு பெண் தன்னை காண்பிப்பவளாக ஏன் தன் ஆடைகளை களைகின்றாள்? அது கெட்டது என்பதனை அவள் அர்த்தம் கொள்ளவில்லை அவர்கள்...கண்ணியில் அகப்பட்டுள்ளனர். அது அவர்களுக்குத் தெரியாது. பாருங்கள்.

அது முன்னொரு காலத்தில் இருந்தது போல, எல்லா இடங்களிலும் பெண்களின் உடல் காட்சிப்படுத்தப்படுகிறது. பாருங் கள்.

மிகவும் கவர்ச்சியாக, தேவ புத்திரர்கள் ஏறக்குறைய தங்கள் மனநிலையை விட்டு அகலும்படிக்குச் செய்கிறது.

அதே நேரத்தில் ஒரு சோதோம் கொமோரா சட்டம் அதிலிருந்து அவளை பாதுகாக்க உள்ளது. எவ்வளவு அவமா னத்திற்குரியது.

மேலும், நமது அரசாங்கமும் இது போன்ற காரியங்களுக்காகவே நிற்கிறது.

# பெண்கள் பெண்களுடன் வாழ்வதும், ஆண்கள் ஆண்களுடன் வாழ்வதும் நெறி தவறிய சிந்தையாயுள்ளது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 51, தேவனைக் குறித்து நிச்சயமுடையவர்களாக இருங்கள் கிளெவ்லாண்ட், டென்னாஸி, 59-0708

ஓரினச்சேர்க்கை என்னும் தாறுமாறு, நெறி தவறுதலைப் பாருங்கள்.

கடந்த வாரம் லாஸ் ஏஞ்சலிஸில் கிறிஸ்தவ வியாபாரிகளின் கூட்டத்தில் என்னை பேச அழைத்திருந்த போது, கடந்த ஆண்டைக் காட்டிலும் ஓரினச் சேர்க்கை நாற்பது சதவீதம் அதிகரித்துள்ளதாக செய்தித்தாளின் மூலம் அறிந்தேன்.

பையன்களும், ஆண்களும் விடுதி அறைகளில் ஒருவரோடொருவர் தங்கி வாழ்க்கை நடத்துகின்றனர்.

நெறி பிரண்டுவிட்டது.

(இயல்பான வாழ்க்கை முறை தாறு மாறாக்கப்பட்டு விட்டது. காரணம், பெண் கள் தங்களை தாங்களே தரம் தாழ்த்திக் கொண்டனர் மேலும், தங்களை பொதுவாக் கிக் கொண்டனர். இது ஆண்களை நெறி தவறச் செய்துள்ளது.

பெண்கள் பெண்களுடன் வாழ்வதும், ஆண்கள் ஆண்களுடன் வாழ்வதும் நெறி தவறிய சிந்தையாயுள்ளது.

தேவன் எது நடக்கும் என்று உரைத் தாரோ அதுவே நடந்தேறுகிறது. "சோதோ மின் நாட்களில் இருந்ததைப் போலவே மனுஷ குமாரன் வருகையின் நாட்களிலும் இருக்கும்"

அமெரிக்க மக்களின் முழு சிந்தையையும் பாருங்கள். மேலும் இவ்வுலக மக்கள் படிப்படியாக தாறுமாறானவர்களாக நெறியற்றவர்களாகவே மாறி வருகின்றனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 13, ஆபிரகாமுடன் கர்த்தரின் உடன்படிக்கை, சீயோஃபால்ஸ், SD, 56-0283

விவாக வாழ்க்கையானது தேவனால் உண்டானது (of God) விவாக வாழ்க்கை யானது கர்த்தருடையது என வேதம் உரைக்கிறது.

விவாக மஞ்சம் அசுசிப்படாமல் இருக் கிறது. ஆனால் விபச்சாரமும் நெறிகளும் புறம்பாக இருப்பதும் தான் தாறுமாறாகும்.

அமெரிக்க மக்களின் முழு சிந்தை யையும் பாருங்கள். மேலும் இவ்வுலக மக்கள் படிப்படியாக தாறுமாறானவர்க

ளாக நெறியற்றவர்களாகவே மாறி வருகின்றனர்.

வானொலி மற்றும் தொலைக்காட்சி இவைகளும் கூட எல்லா பாவமும் ஒன்று சேர்ந்த ஒரு பெரிய திரட்சியாகவே உள்ளது.

ஏனெனில், மனிதனின் இதயமும் அவைகளையே நாடுகிறது.

(மனித இருதயத்தின் ஒவ்வொரு எண்ணமும் ஜலப்பிரளய அழிவிற்கு முன்னர் இருந்தது போலவே இருக்கிறது. மனிதனுடைய ஒவ்வொரு ஒவ்வொரு வாஞ்சையும் தொடர்ந்து தீமையாகவே. அசுத்தமாகவே உள்ளது.

# காரணம், இதற்கு முன் உலகம் அறிந்திராத பாவம் மற்றும் அவிசுவாசத்தை கொண்டுள்ளோம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 20, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் கெண்டக்கி, 55-0806

ஆனால், இது என்ன, முன் என்று மில்லாத சிறந்த மருத்துவர்களையும், என்றுமில்லாத சிறந்த மருத்துவமனை களையும், என்றும் இதுவரை கையாளப் பட்டிராத சிறந்த மருந்துகளையும் கொண் டுள்ள நாட்களில் வாழ்ந்து வருகிறோம்.

இருப்பினும், இதற்கு முன்னர் உலகம் அறிந்திராத அதிக நோய்கள் நம்மிடையே இருக்கின்றன.

காரணம், இதற்கு முன் உலகம் அறிந் திராத பாவம் மற்றும் அவிசுவாசத்தை கொண்டுள்ளோம்.

"அது சரியா? அது சரியா?" என்று அங்கலாயித்து மனிதனின் சிந்தையை கிழித்தெறியக்கூடிய அதிகப்படியான காரி யங்களைக் கொண்டுள்ளோம்.

அந்த பரிதாபத்திற்குரிய மக்களுக்கு என்ன செய்வதென்றும் கூட தெரியவ தில்லை.

பாவமும் வன்முறையும் உள்ளே வந்த தற்கு இதுவே காரணமாக உள்ளது.

# அவர்கள் மனம் முழுவதும் உடலுறவின் பேரிலும் அசுத்தம் மற்றும் தேவ பயமற்ற காரியங்களின் பேரிலேயே உள்ளது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 39, கிறிஸ்துவின் முத்திரை, லாஸ் ஏஞ்சலில்,கலிபோர்னியா 55-0312

உலகம் மாசுப்பட்டிருப்பதில் ஆச்சரிய மில்லை.

அவர்கள் மனம் முழுவதும் உடலுற வின் பேரிலும் அசுத்தம் மற்றும் தேவ பயமற்ற காரியங்களின் பேரிலேயே உள்ளது.

இது பிரசங்கிமார்களிடம் கூட உள்ளது. ஆமென்.

அது கேவலமான ஒன்றாகும்.

***Bro. Branham:***

~~~~~~~~

இருப்பினும்,
நீங்கள் தேவனுக்கு
அதிருப்தியையுண்டாக்கி,
நீண்ட காலம் அப்படியே
இருந்து விடலாம் என்று எதிர்
பார்க்க முடியாது.

~~~~~~

செய்தி: தேவனை குறித்து
நிச்சயமுடையவர்களாயிருங்
கள்



# சிந்தையின் போர்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து